**பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியம் - 2013**

-----------------------------------------------------------------------------

பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 12 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-------------------------------------------------------------------------------------

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

----------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

----------------------------

### 2.1 அபிப்பிராயம்

-----------------------

நிதிக்கூற்றுக்களானவை, பல்கலைக்கழக ஓய்வூதிய நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------------

#### 2.2.1 செலுத்தவேண்டிய கணக்குகள்

---------------------------------------------

வாழ்க்கைச் செலவினங்களை உள்ளடக்கி ஓய்வூதியத்தைக் கணிப்பீடு செய்வதற்கு அமைச்சரவை தீர்மானித்ததன் பின்னர் அதற்காக ஓய்வூதியத்தில் செலவு வைக்கவேண்டிய தொகையைத் தீர்ப்பதற்காக 2012 ஆம் ஆண்டின் போது திறைசேரியிலிருந்து கிடைத்த ரூபா 5,586,731 தொகை உரிய ஓய்வூதியக் கணக்கில் செலவு வைக்கப்படாது உயர் கல்வி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய வாழ்க்கைச் செலவுப் படியாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

#### 2.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

------------------------------------------------------------------------------------------------------------------------------------------

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 97 ஆம் பிரிவு | ஓய்வூதிய நிதியத்தை முறைமைப்படுத்துதல், நிருவகித்தல் மற்றும் அதன் முகாமைத்துவ நிலைமைகளுக்காக ஆணைக்குழுவினால் விபரக்கொத்து தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 1999 ஏப்ரல் 09 ஆந் திகதிய அமப/99/0438/11/033 ஆம் இலக்க அமைச்சரவைத் தீர்மானம் | அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் உத்தியோகத்தர்களுக்காக பல்கலைக்கழக சேமலாப நிதியத்திற்கு செலவு வைக்கப்படுகின்ற 25 சதவீதத் தொகையிலிருந்து 10 சதவீதம் ஓய்வூதிய |

நிதியத்திற்குச் செலவு வைக்க வேண்டியிருந்தது. எனினும் அதற்கு முரணாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருப இலக்கம் 747 இன் மூலம் ஊழியரினால் சேமலாப நிதியத்திற்கு செலவு வைக்கப்படுகின்ற 15 சதவீத பங்களிப்புத் தொகையிலிருந்து 8/15 அளவு ஓய்வூதிய நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 2012 இன் கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம் பொது முயற்சிகள் குழுவின் அமர்வின் போது இது தொடர்பாக கலந்துரையாடப்பட்டிருந்தும் அந்த பிரச்சனைகளுக்காக உரிய தீர்வைப் பெற்றுக்கொள்வதற்கு இதுவரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

---------------------------

### 3.1 நிதி விளைவுகள்

------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 446,407,001 மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 205,857,407 ஆக இருந்தது. அதன் பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது நிதி விளைவுகளில் ரூபா 240,549,594 தொகையான அதிகரிப்பைக் காட்டியது. நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு முதலீட்டு வருமானம் ரூபா 241,972,967 இனால் உயர்வடைந்தமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------

### 4.1 செயலாற்றல்

--------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் சேவைக் காலம் 20 வருடங்களைப் பூர்த்தி செய்யாது சேவையிலிருந்து விலகிய ஊழியர்களுக்கு அவர்களின் ஓய்வூதியக் கணக்கில் செலவில் உள்ள மீதியைச் செலுத்தும் போது 01 தொடக்கம் 05 வருடங்கள் வரையான காலதாமதத்தை எடுத்த 07 சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(ஆ) சேவைக் காலம் 20 வருடங்களைப் பூர்த்தி செய்யாத ஊழியர்களுக்கு அவர்களின் ஓய்வூதியக் கணக்கில் செலவில் உள்ள பங்களிப்புப் பணத்தை மீளச் செலுத்தும் போது கடைசியாக வட்டி கணிப்பீடு செய்யப்பட்ட திகதி மற்றும் அத்தொகையும் வட்டியும் செலுத்தப்பட்ட திகதி என்பவற்றுக்கிடையே கால இடைவெளி காணப்படுகின்றமையினால் பங்களிப்பாளரால் இழக்கப்படுகின்ற வட்டித்தொகை காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------------

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. ஓய்வூதியத்தை தீர்மானிப்பது தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.